00106

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானுடவியல் மற்றும் சமூகவிஞ்ஞானங்கள் பீடம்

சட்டக்கற்கைகள் திணைக்களம்

சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம்_ மட்டம் 4

இறுதிப் பரீட்சை - 2023/2024

LLU 4609 – குடும்பச் சட்டம்

காலம்: 03 (மூன்று) மணித்தியாலங்கள்

**திகதி**: 26th மே 2025 **நேரம்**: 01.30 - 04.30pm

**மொத்த வினாக்களின் எண்ணிக்கை எட்டு** (08)

ஏதேனும் ஐந்து (05) வினாக்களிற்கு மாத்திரம் விடையளிக்குக.

தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

நீங்கள் தேர்ந்தெடுத்த கேள்விகளுக்கான பதில்களை, வழக்கு சட்டங்கள் மற்றும் சட்டத் திருத்தங்களை மேற்கோள்களுடன் விவாதிப்பது கட்டாயம் என்பதை கவனிக்க.

### பகுதி அ_ பின்வரும் கட்டாயமான கேள்விக்கு பதில் அளிக்கவும்

1. அபிமான் என்பவன் இங்கிலாந்து மற்றும் கனடாவில் பல நிறுவனங்களை கொண்ட ஒரு பணக்கார வியாபாரியானவன். அவன் ரனுலியுடன் 27 வருடங்கள் இல்லற வாழ்க்கை நடத்தினான். அவர்களுக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர்: 16 வயதான ஆன், இப்போது பாடசாலையில் கல்வி பயின்றுக்கொண்டிருக்கிறான்: 22 வயதான அன்டன், பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றுக்கொண்டிருக்கிறான்; மற்றும் மூத்த பிள்ளையான 26 வயதான நீதா, மிக மோசமான அளவில் உடல் மற்றும் மன ஊனமுற்றவராக இருக்கின்றாள். அபிமான் கடந்த சில வருடங்களாக கொழும்பில் பணியாற்றி வருகிறான், அந்த நேரத்தில் ரனுலிக்கு வீட்டு செலவுகளுக்காக நிதியுதவி அனுப்பி வந்தான். ஆனால் கடந்த ஒரு வருடமாக அவன் எந்த நிதி உதவியும் வழங்கவில்லை. இல்லத்தரசியான ரனுலி வீட்டுச்செலவை பார்ப்பதற்காகவும் பிள்ளைகள் மற்றும் தன்னை பராமரிக்கவும் பொருளாதார சிரமத்தில் இருக்கிறாள். அவசியமான உணவுப் பொருட்களை அக்கம் பக்கக் கடையில் கடனாக வாங்க வேண்டிய சூழ்நிலைக்கு வந்துள்ளார். அபிமானிடம் மீண்டும் நிதியுதவியை கோரிய போது, அவர் அதை மறுத்து, ரனுலி தன் பெற்றோர்களின் வீட்டிற்குச் சென்று பிள்ளைகளை அவர்களிடம் விட்டுவிட்டு வேலைக்கு செல்லலாம் எனக் கூறினார். ஆனால் ரனுலி, அபிமானுக்குச் சொந்தமான நுவரெலியாவில் உள்ள மணவாழ்க்கை இல்லத்திலிருந்து வெளியேற மறுத்துவிட்டாள்.

இந்தநேரத்தில், அபிமானின் 75 வயதான தாயார் சோமா, கண்டியில் உள்ள குடும்ப வீட்டில் தனியாக வாழ்கிறாள். அவர் ஒரு சிறிய ஓய்வூதியம் மற்றும் அண்டை அயலவர்களின் நேரல்லாத உதவியின்பால் தங்கி வருகிறாள். அவள் தனது மகனிடம் பல முறை தாபரிப்பு கேட்டு கேட்டும், அபிமான் பதில் அளிக்கவில்லை.

மேலே வழங்கப்பட்ட நிகழ்வுகளின் அடிப்படையில், ரனுலி, அவரது பிள்ளைகள் மற்றும் சோமா ஆகியோர், இலங்கையின் எவ் சட்டமைப்பின் கீழ் அபிமானிடம் தாபரிப்பு கோர முடியும் என்கின்ற நிலைமை பற்றி ஆய்வு செய்க.

(20 புள்ளிகள்)

## பகுதி ஆ _ இப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விகளில் நான்கு (4) கேள்விகளுக்கு பதிலளிக்க.

2. கீழே வழங்கப்பட்ட ஒவ்வொரு சூழ்நிலையையும் அடிப்படையாகக் கொண்டு, கீழே தரப்பட்டவற்றின் சட்ட ரீதியான நிலையை சுருக்கமாக விவாதிக்க. ஒவ்வொரு பகுதியில் தரப்பட்டுள்ள சூழ்நிலைகள் தனித்தனியாகும். மற்றும் அவைகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை அல்ல.

Land name: Pol Watta

Extent: 4 acres

A = Husband

B = Wife

X = Daughter

Y = Son

I. பொல் வத்தே உரிமையாளர் "A" பொதுச் சட்டத்தின்படி ஆட்பட்டவர், 2024 இல் மரணசாதனமில்லாமல் (intestate) இறந்தார். "B", "X" மற்றும் "Y" களுக்கு பொல் வத்தே பற்றிய உரிமைகள் என்ன என்பதை விவாதிக்கவும்.

II. பொல் வத்தே உரிமையாளர் "A" பொதுச் சட்டத்தின்படி ஆட்பட்டவர், அவர் பொல் வத்தேவை அறச்சார் நம்பிக்கைப் பொறுப்புக்கு விருப்பாவணத்தில் கொடுத்து, அதில் "B", "X" மற்றும் "Y" களை தவிர்த்தார். இந்த விருப்பாவணத்தின் வலிதாக்கத்தை விவாதிக்க.

III. "X" 2015-ல் Kandyan சட்டத்தின் கீழ் தீக ( Diga) திருமணம் செய்தவன், 2017-ல் தனது சொந்த வீட்டுக்கு பொல் வத்தேக்கு திரும்பினான். "A" மற்றும் "B" 2024-ல் கார் விபத்தில் இறந்தனர். பொல் வத்தே யாருக்கு உரித்தாகும் என்பதைக் கூறுக.

IV. "Y" "A" மற்றும் "B" ஆகியோரின் மகவேல் (adopted child). 2020-ல் "A" மற்றும் "B" மரணசாதனமில்லாமல் (intestate) ஒரு மோட்டார் விபத்தில் இறந்தனர். அனைவரும் முஸ்லிம் சட்டத்தின்படி ஆட்பட்டவர்கள் என கருதி, "X" மற்றும் "Y" க்கு பொல் வத்தேயுடன் தொடர்புடைய உரிமைகள் என்ன என்பதை விவாதிக்க.

V. தேசவழமைச் சட்டத்தின்படி ஆட்பட்ட "A" மற்றும் "B" 2018-ல் 5வது திருமண ஆண்டு விழாவை முன்னிட்டு ஒன்றாக பொல் வத்தேயை வாங்கினர். 2024-ல் "A" இறந்தபின், "B" அந்த நிலத்தை தன் சகோதரிக்கு பரிசளித்தார். பரிசளிப்பு சட்டபூர்வமானதா என்று விவாதிக்க.

(4 x 5 = 20 புள்ளிகள்)

03. ஒரு வலிதான திருமணத்தின்போது பிறந்த குழந்தைக்கு ஊகத்தின் அடிப்படையில் மகவுமுறைமை (presumption of legitimacy) வழங்கும் வழியாக, தந்தைமை (paternity) தொடர்பான பிரச்சனையை இலங்கை சட்டம் எவ்வாறு அணுகுகிறது என்பதை விமர்சனாத்மகமாக மதிப்பீடு செய்யவும்.

உங்கள் பதிலில், பொருத்தமான சட்ட விதிமுறைகள், வழக்குச் சட்டங்கள் மற்றும் இந்த ஊகத்தைக் களைவதற்கான தற்போதைய நீதிமன்ற அணுகுமுறை ஆகியவற்றை ஆராய்க.

மேலும், இன்றைய அறிவியல் முன்னேற்றங்களின் அடிப்படையில் இந்த ஊகத்தின் பொருத்தத்தையும் விவாதிக்க.

(20 புள்ளிகள்)

04. பொதுச் சட்டம், கண்டியன் சட்டம், மற்றும் முஸ்லிம் சட்டம் ஆகியவற்றின் கீழ் விவாகாத்தைக் கட்டுப்படுத்தும் சட்டச் சூழலை ஒப்பிடுக..

உங்கள் விடை "தவறு (fault)" மற்றும் "திருத்த முடியாத திருமண முறிவு (irretrievable breakdown of marriage)" என்ற கருத்துக்களை மையமாக கொண்டு அமைதல் வேண்டும்.

(20 புள்ளிகள்)

05. அருண், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர், 2010இல் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்தில் சேர்ந்தான். பல்கலைக்கழகத்தில் இருந்தபோதே, மருத்துவ பீடத்தில் படித்துக் கொண்டிருந்த மீனாவுடன் அவன் நெருக்கமான உறவை உருவாக்கினான். ஆனால் சாதி மற்றும் கலாசார வேறுபாடுகள் காரணமாக மீனாவின் குடும்பம் இந்த உறவை ஏற்கவில்லை.

2017 இல் அருண் பத்திரிகை அலுவலராக மட்டக்களப்பில் வேலை பெற்றார் மற்றும் அங்கு நிரந்தரமாக குடியமர்ந்தான். அதே நேரத்தில் மீனாவும் மட்டக்களப்பு பொது வைத்தியசாலையில் மருத்துவ அதிகாரியாக நியமிக்கப்பட்டாள். இதனால், இருவரும் யாழ்ப்பாணத்தில் அருணின் வீட்டில் ஒரு பாரம்பரிய தாலி நிகழ்வின் மூலம் திருமணத்தை முடித்தனர். இது மீனாவின் பெற்றோரின் அறிவு மற்றும் சம்மதமின்றி நடைபெற்றது. இவர்களின் திருமணம் (Marriage Registration Ordinance) பதியப்படாது இருந்த போதிலும், இருவரும் கணவன் மனைவியாக வாழ்ந்தனர்.

2019இல் மீனா ஒரு ஆண் குழந்தையை பெற்றார்.

மேலே உள்ளவற்றை கருத்தில் கொண்டு, கீழ்காணும் கேள்விகளுக்கு காரணங்களுடன் விடையளிக்க:

அ. அருணுக்கும் மீனாவுக்கும் இடையே ஒரு வலிதான திருமணம் உண்டா?

(10 புள்ளிகள்)

ஆ. அனைத்து தரப்பினரும் கண்டியன் சட்டத்தின் கீழ் நிர்வகிக்கப்பட்டவர்களாக இருந்தால், மற்றும் இந்த ஜோடி பாரம்பரிய பொறுவா (Poruwa) நிகழ்வின் மூலம் தங்கள் திருமணத்தை நிச்சயித்திருந்தால் உங்கள் பதில் மாறுமா?

(05 புள்ளிகள்)

இ. மேற்கண்ட திருமணம் 1987இல் நிகழ்ந்ததாகவும், முதல் திருமணம் இன்னும் வலிதாக இருக்கும் போதே 1990இல் அருண் இஸ்லாத்துக்கு மாறி சபானா என்ற முஸ்லிம் பெண்ணை திருமணம் செய்ததாகவும் கருதுக. இரண்டாவது திருமணம் வலிதானதா?

(05 புள்ளிகள்)

06. பிரகாஷ் மற்றும் நிகினி என்பவர்கள் திருமணமான தம்பதியர்கள் ஆவர்கள். அவர்கள் கொழும்பிலுள்ள ஒரு உயர் மாடியில் தங்கள் மகள் மினூரியுடன் வாழ்ந்தனர். 2022ஆம் ஆண்டு, பிரகாஷ் நடுவிரவில் குடித்துவிட்டு வீட்டிற்கு வர தொடங்கினான். நிகினி எப்போதும் அவனிடம் இச்செயலை நிறுத்துமாறு கேட்டுக்கொண்டாள், ஆனால் பிரகாஷ் தனது பழக்கத்தை தொடர்ந்தான்.

இதனால், 2023இல் நிகினி தம் மணவாழ்க்கை இல்லத்தை விட்டு வெளியேறி, தன் மகளான மினூரியுடன் தனது பெற்றோரின் வீட்டான காலிக்கு இடம்பெயர்ந்தார். அங்கு நிகினியின் சகோதரி குமாரியும் வசித்தாள்.

காலியில் மினூரி ஒரு முன் பள்ளியில் சேர்க்கப்பட்டாள், மற்றும் நிகினி ஒரு துணிக்கைவசதி தொழிற்சாலையில் வேலை பெற்றாள். இரவு நேர வேலை கடமைகள் காரணமாக, மினூரியின் முன்பள்ளியில் ஆசிரியையாக வேலை செய்துகொண்டிருந்த குமாரி, நிகினிக்கு குழந்தையை பராமரிக்க உதவினாள்.

2024இல், மினூரியின் நான்காவது பிறந்த நாளில், பிரகாஷ் நிகினியை தொடர்பு கொண்டு குழந்தையின் கட்டுக்காப்பு வேண்டினான். ஆனால் நிகினி அதைத் தெளிவாக மறுத்தாள்.

அதன் பிறகு, பிரகாஷ் நீதிமன்றத்தில் கட்டுக்காப்பு உத்தரவை கோரி வழக்கு தொடங்கினான். ஆனால் வழக்கின் நடுவே நிகினி திடீரென இறந்துவிட்டாள். அதன்பின் குமாரி மினூரியின் முழு பராமரிப்பையும் மேற்கொண்டாள்.

தற்போது, குமாரி சட்டபூர்வமாக மினூரியின் கட்டுக்காப்பு உரிமையைப் பெற விரும்புகிறாள். அவர் கூறுவதைப் படி, மினூரியை மீண்டும் பிரகாஷின் வசிப்பிடமான கொழும்பிற்கு அழைத்துச் செல்வது, குழந்தையின் நலனுக்கு தீங்கு விளைவிக்கும்.

ஆனால், பிரகாஷ் ஒரு உயிருடன் உள்ள பெற்றோராக, தன்னிடம் மேலதிக உரிமை இருப்பதாகக் கூறி கட்டுக்காப்பை கோருகிறான்.

மேலே உள்ள பிரச்சனையை விமர்சனமான முறையில் விவாதிக்கவும். இதைப் பயன்படுத்தி, பெற்றோர் மற்றும் மூன்றாவது தரப்பினர் இடையே ஏற்படும் கட்டுக்காப்பு சிக்கல்களை இலங்கை நீதிமன்றங்கள் எவ்வாறு தீர்மானிக்கின்றன என்பதைக் கவனத்தில் கொள்க.

(20 புள்ளிகள்)

07. அ. தனிஷா மற்றும் ஒஷான், இருவரும் கொழும்பில் வசிக்கும் இலங்கை குடிமக்கள் ஆவார்கள். அவர்கள் தங்களது திருமணத்தை 2009 ஆம் ஆண்டு திருமணப் பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ளனர். பல வெற்றியற்ற கருத்தரிப்பு சிகிச்சைகள் நடைபெற்ற பிறகு, அவர்கள் ஒரு குழந்தையை மகவேற்பு செய்ய முடிவு செய்தனர். மொனராகலா மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமப்புற மருத்துவமனையில் நர்ஸ் ஆக பணிபுரியும் தனிஷாவின் மருமகள், மால்கி எனப்படும் ஒரு புதிதாகப் பிறந்த பெண் குழந்தையைப் பற்றி தகவல் வழங்கினாள். அந்தக் குழந்தையின் பெற்றத் தாய் (biological mother) , ஒரு திருமணம் செய்யாத இளம்பெண், தனது நிதி மற்றும் உணர்வுப்பூர்வச் சூழ்நிலைகளால் குழந்தையை பராமரிக்க முடியாத காரணத்தால், மகவேலுக்குத் தர விருப்பம் தெரிவித்தாள்.

தனிஷா மற்றும் ஒஷான் அந்த பெற்றத் தாயைச் சந்தித்து, அவரது ஒப்புதலை பெற்றனர். அவர்கள் குழந்தையை கொழும்புக்குக் கொண்டு வந்து பராமரிக்கத் தொடங்கினர். அவர்கள் எந்தவொரு அதிகாரப்பூர்வ மகவேற்பு நடைமுறைகளையும் பின்பற்றவில்லை. ஆனால் அவர்கள் அந்தக் குழந்தையை தங்களது குடும்பப் பெயரில் ஒரு முன்பள்ளியில் சேர்த்துள்ளனர் மற்றும் அவர்களை தங்களது மகளாகக் குறிப்பிடுகின்றனர்.

தனிஷா, ஒஷான் மற்றும் அந்தக் குழந்தைக்கு இடையிலான தற்போதைய ஏற்பாட்டின் சட்டத் தகுதியைப் பற்றி விவாதிக்க. இது ஒரு செல்லத்தக்க மகவேல் ஏற்பாடா என்பதை கவனத்தில் கொள்ளவும். இல்லையெனில், இலங்கையில் நடைமுறையில் உள்ள சட்டத்தின் கீழ் மால்கியை சட்டப்பூர்வமாக மகவேலாக ஏற்க அவர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறை என்ன என்பதை விவரிக்க.

(10 புள்ளிகள்)

ஆ. பிறந்த சில நாட்களிலேயே கைவிடப்பட்ட குழந்தை டிலன், தற்போது இலங்கையின் நன்னடத்தை மற்றும் குழந்தை பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் பாதுகாப்பில் உள்ளான். அவனைக் கவனித்துக் கொள்வதற்கோ பராமரிப்பதற்கோ ஏற்கக்கூடிய எந்த உறவினர்களும் கிடையவில்லை.

எலிசபெத் மற்றும் பீட்டர் என்ற ஆஸ்திரேலிய திருமணமான தம்பதியினர், தங்களுக்கே தாங்களே குழந்தைகளை பெற்றுக் கொள்ள முடியாத நிலையால், டிலனை மகவேலாக எடுத்துக்கொள்ள விரும்புகிறார்கள்.

மகவேற் சட்டத்தின் (Adoption of Children's Ordinance) கீழ், பிள்ளை மகவேற்பாக எடுத்துக்கொள்வதற்கு அவர்கள் பூர்த்தி செய்ய வேண்டிய தேவைகள் என்ன என்பதை விவரிக்க.

(10 புள்ளிகள்)

08. கீழ்க்கண்ட தலைப்புகளில் இரண்டை (2) தேர்வு செய்து குறிப்பு எழுதுக:

அ. மணம் வெற்றாதல் (Nullity of Marriage)

ஆ. இந்நாளைய திருமண ஏற்பாடுகளின் வடிவங்கள் (Modern forms of marital arrangements)

இ. ஒரு மனைவியின் சீதனத்தின் மீதான உரிமைகள் (The wife's rights over dowry)

ஈ. சிறுவயது குழந்தையின் சொத்துக்களை நிர்வகிக்கும் உரிமை (The right to administer the property of a minor)

(10 x 2 = 20 புள்ளிகள்)

**** பதிப்புரிமைப் பெற்றது ****